** பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் போது,கணக்காய்வாளர் அதிபதிஅவர்களினால் வெளியிடப்பட்ட இறுதிக் கணக்காய்வுஅறிக்கை ஸ்கேன் செய்யப்பட்டு **(SCAN)** இதில் உட்சேர்க்கப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்.

எனது இல. : JLO/C/A/DEP/FA/2023 2024 மே 30 ஆம் திகதி

கணக்கீட்டு அலுவலர்
சிறைச்சாலைகள் திணைக்களம்.

தலைப்பு 232 சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 ஆம் ஆணடின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.

மேற்குறித்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றின் மும்மொழிகளிலான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இத்தோடு இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்/ ஆங்கிலத்தில்,
ஆர்.எஸ்.கட்டுகம்பல
சிரேட்ட உதவி கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

பிரதி :- பணிப்பாளர் நாயகம் - அரச கணக்குகள் திணைக்களம்

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. : JLO/C/A/DEP/FA/2023 2024 மே 30 ஆம் திகதி

கணக்கீட்டு அலுவலர்
சிறைச்சாலைகள் திணைக்களம்.

தலைப்பு 232 சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பளியுள்ள கருத்துரை

தலைப்பு - 232 சிறைச்சாலைகள் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கண்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரைகளைத் தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

1.2 முனைப்பளியுள்ள கருத்துரைக்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் முனைப்பளியுள்ள எனது கருத்துரைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு அலுவலரின் மற்றும் கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கமைய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் ஊழல் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொய்யான கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் சமகால நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க முடியுமான விதத்தில் தனது வருமானம்,செலவுகள், சொத்துக்கள் மற்றம் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு ஏடுகளையும் மற்றும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய நிதி நிர்வாகத்திற்காக விளைதிறன்மிக்க உள்ளக நிர்வாக முறைமையை தயாரித்துப் பேணிவருவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதுடன் அந்த முறைமையின் விளைதிறன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்க வகையில் நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு.

மொத்தமாக நிதிக் கூற்று, ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படும் பொருண்மையான பொய் கூற்றுக்களைக் கொண்டிராதவை என நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்துரை உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கான உறுதிப்பாடு இல்லாதிருக்கும். ஊழல் மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில் நியாயம் மற்றும் தொழில் ஐயுறவுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- ஊழல் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பொய் பொய்க் கூற்றுக்களின் ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் ஊழல் அல்லது தவறு காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை நீக்கிக்கொள்வதற்கு, போதுமானளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக்கொள்ளல் எனது கருத்துரைக்கு அடிப்படையாகும். பொருண்மையான பொய் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் ஊழல் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, பொய் ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளை தவிர்த்தல் ஊழல் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாகக் கருத்தைத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை என்ற போதிலும் சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தலை மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களில் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான

விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மற்றும் வெறிப்படுத்தல்கள் உள்ளிட்ட மொத்தமாக நிதிக் கூற்றுக்களை முன்வைப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்கண்டு கொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தினேன்.

1.5. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவிக்கின்றேன்

(அ) நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

(ஆ) கடந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுத் தொடர்பில் என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டிக்கவில்லை.

கடந்த வருடத்திற்குரிய அறிக்கையின் பந்திகள் தொடர்பு	செயற்படுத்தப்படாதிருந்த பரிந்துரைகள்	இந்த அறிக்கையின் பந்தி தொடர்பு
1.6.1 (அ)	முன்னைய வருடத்தில் நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதிக்கும் மீளாய்வு வருடத்தின் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுதல்	1.6.2 (அ)
1.6.3 (அ)	கடன்பட்டோர் மீதி தொடர்பாக உறுதி செய்து கொள்வதற்கான சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாமை	1.6.3

1.6 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக கருத்துத் தெரிவித்தல்.

1.6.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

(அ). நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள ஏசிஏ – 2 (iv) படிவம் மற்றும் ஏசிஏ – 2 (v) படிவங்களில் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய மற்றும் கருத்திட்டத்திற்கமைய செலவு நிதியீட்டப் பொழிப்பில் உள்நாட்டு நிதியாக ரூபா. 12,569,000,000 உம் மற்றும் வெளிநாட்டு ஒதுக்கீடாக தேறிய ஒதுக்கீடு ரூபா. 2,000,000 எனக் குறிப்பிட வேண்டுமெனினும் உள்நாட்டு நிதியின் கீழ் தேறிய ஒதுக்கீடாக ரூபா. 12,571,000,000 தொகை வெளிக்காட்டப்பட்டிருந்தது.

(ஆ). நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள ஏசிஏ – 2 (ii) படிவத்தில் காட்டப்படுகின்ற செலவுக் கூற்றில் 2509 – 14 செலவு விடயத்தின் கீழ் நிதியீட்ட குறியீட்டென் 13 என காட்டப்பட வேண்டுமெனினும் இலக்கம் 11 எனக்காட்டப்பட்டிருந்தது.

1.6.2. நிதியல்லாச் சொத்துக்கள்

(அ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியல்லாச் சொத்துக்கள் மீதி ரூபா. 10,223,624,941 ஆக இருந்த போதிலும் மீளாய்வு வருடத்தில் நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஏசிஏ 6 படிவம் (எஸ்ஏ 82) இன் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா. 10,042,573,381 ஆக காணப்பட்டமையால் ஆரம்ப மீதிக்கிடையில் ரூபா. 181,051,560 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியல்லாச் சொத்துக்கள் மீதி ரூபா. 10,223,624,941 ஆக இருந்த போதிலும் மீளாய்வு வருடத்திற்கான கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் எஸ்ஏ 82 படிவத்தின் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதி ரூபா. 10,025,820,167 ஆக காணப்பட்டமையால் ஆரம்ப மீதிக்கிடையில் ரூபா. 197,804,774 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) நிதி கூற்றுக்களில் உள்ளடங்கியுள் ஏசிஏடி - 6 படிவம் (எஸ்ஏ 82) இன் பிரகாரம் (எஸ்ஏ 82) இன் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் ஆரம்ப மீதிக்குரிய சீராக்கம் ரூபா. 1,240,533,864 ஆக இருந்த போதிலும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் எஸ்ஏ - 82 படிவத்தின் பிரகாரம் அது ரூபா 620,395 ஆக காணப்பட்டமையினால் ரூபா 1,239,913,469 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிதி கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள எஸ்ஏ 82 - படிவம் (ஏசிஏடி – 6) இன் பிரகாரம் நிதியல்லாச் சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 11,189,480,019 ஆக இருந்த போதிலும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எஸ்ஏ - 82 படிவத்தின் பிரகாரம் அந்த மீதி ரூபா. 10,211,189,928 ஆக காணப்பட்டமையினால் இறுதி மீதிக்கிடையில் ரூபா 978,290,091 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எஸ்ஏ - 82 படிவத்தின் மற்றும் திணைக்களத்தின் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய நிதியல்லாச் சொத்துக்களின் இறுதி மீதிகளுக்கிடையில் ரூபா. 978,290,091 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏசிஏடி – 6 படிவத்தில் (எஸ்ஏ 82) செலவு விடய இல 9152 – 2 – 1 இன் கீழ் மற்றும் செலவு விடய இல 9152 – 2 – 1 இன் கீழ் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தமாக காட்டப்பட்டுள்ள போக்குவரத்து மற்றும் ஏனைய இயந்திர உபகரணங்களின் மீதி முறையே ரூபா. 938,924,404 மற்றும்

ரூபா 733,912,844 எனக் காட்டப்பட்டுள்ளது. அதன் சரியான கூட்டுத் தொகை முறையே ரூபா. 938,893,254 மற்றும் ரூபா. 733,973,994 ஆகக் காணப்படல் வேண்டுமென்பது அவதானிக்கப்பட்டது.

(எ) 2023 ஆம் ஆண்டில் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா. 6,815,234 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்களில் ரூபா. 1,731,476 பெறுமதியான சொத்துக்களும், நீர்கொழும்பு மற்றும் ரிமான்ட் ஆகிய சிறைச்சாலை நிருவனங்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்த பெறுமதிகள் தெரியாத 09 விடயங்களுக்கு உரிய நிதியல்லாச் சொத்துக்களும் திணைக்களத்தின் நிதி கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இதற்கு மேலதிகமாக 2023 ஆம் ஆண்டில் சிறைக்கைதிகள் நலனோம்பல் நிதியத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா. 206,197 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் வகுதிக்குற்பட்ட 20 விடயங்களுக்குரிய 198 உருப்படிகள் நுகர்வுப் பண்டங்களாகக் கருதப்பட்டு சிகாஸ் முறைமையில் உள்ளடக்கப்படடிருக்கவில்லை.

1.6.3. கணக்காய்வுக்கான சாட்சியங்கள் காணப்படாமை.

மீளாய்வு வருடத்தில் கைத்தொழில் மற்றும் விவசாய முற்பணக் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா. 148,861,870 கிடைக்க வேண்டிய மீதியில் ரூபா. 74,238,302 மீதியை உறுதி செய்து கொள்வதற்குத் தேவையான சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

2 - நிதி மீளாய்வு

2.1. செலவு முகாமைத்துவம்

(அ) 10 நிதிச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 858,000,000 ரூபா மதிப்பீடு செய்யப்பட்ட ஒதுக்கீடுகளிலிருந்து 456,087,246 ரூபா ஒதுக்கீடு மீதமாகக் காணப்பட்டதோடு, அந்த ஒவ்வொரு செலவு விடயங்களின் மீதி நூற்றுக்கு 21 தொடக்கம் நூற்றுக்கு 100 வரையான இடைவெளியினுள் காணப்பட்டது.

(ஆ). 02 மூலதன செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 80,000,000 ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து நிதி ஒழுங்கு விதி 66 இன் ரூபா. 54,300,000 தொகை வேறு செலவு விடயங்களுக்காக மாற்றம் செய்யப்பட்ட பின்னர் ரூபா. 25,565,658 மீதமாகக் காணப்பட்டதோடு அந்த செலவு விடயங்களின் தேறிய ஒதுக்கீட்டின் மீது மீதமடைதல் நூற்றுக்கு 94 தொடக்கம் நூற்றுக்கு 100 வரையான இடைவெளியினுள் காணப்பட்டது.

(இ) 2022 திசெம்பர் 17 ஆம் திகதிய 09/2022 ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை மூலம் வலியுறுத்தப்பட்டுள்ள மற்றும் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின முன்னுரையில் 3.1 இல் (i) தொடக்கம் (xii) வரை குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு உரியதாக மட்டும் மேலதிக ஒதுக்கீட்டுக் கோரிக்கை வரையறுக்கப்பட வேண்டுமெனவும், அதற்கு இணங்கியெழுகாது திணைக்களத்தினால் 1202,1203, மற்றும் 1403 ஆம் இலக்க செலவு விடயங்களுக்காக முறையே ரூபா. 120,000,000, 1,500,000,000 மற்றும் 120,000,000 எனவாறு 1,740,000,000 தொகை குறைநிரப்பி மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடாகப் பெறப்பட்டிருந்தது.

2.2. பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலரினால் செய்யப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆவது பிரிவில் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்த வேண்டிக் காணப்பட்ட போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்காக விளைதிறன்மிக்க உள்ளக நிர்வாக முறைமையை தயாரித்துப் பேணிவரப்படுவதனை பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமென்பதோடு, அந்த முறைமையின் விளைதிறன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்க வகையில் நடாத்துவதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும் எனவும், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் ஒரு பிரதி கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்குத் தேவையானவாறு குறிப்பிட்ட காலப்பகுதியினுள் அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் அளிக்கப்படுகின்றதென பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் சான்றுப்படுத்த வேண்டுமெனினும், அறிக்கையின் 3.6 பந்தியின் பிரகாரம் கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

	சட்டங்கள் ,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை
(அ)	மோட்டார் வாகனச் சட்டம் 25 (1)	சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 32 வாகனங்களுக்கு சட்டத்தின் பிரகாரம் செல்லுபடியான வாகன வருமான அனுமதிப் பத்திரங்கள் 2023 ஆம் ஆண்டுக்காகப் பெறப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்	
	(i).நிதி ஒழுங்கு விதி 272 (3)	சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் ரூபா. 172,241 பெறுமதியான 06 கொடுப்பனவு வவுச்சர்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
	(ii).நிதி ஒழுங்கு விதி 571	04 பொது வைப்புக் கணக்குகளுக்கு உரிய 02 வருடங்கள் கடந்த ரூபா. 100,834,706 பெறுமதி கொண்ட வைப்புக்கள் தொடர்பில் நிதி ஒழுங்கு விதிப் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
	(iii). நிதி ஒழுங்கு விதி 770 (4)	சிறைச்சாலைகள் திணைக்களத்தில் காணப்படுகின்ற 31 வாகனங்கள் தொடர்பில் புறத்தொதுக்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்படாமை மற்றும் மேலும் 34 வாகனங்கள் தொடர்பில் புறத்தொதுக்கல் அலுவல்களுக்காக பரிந்துரை பெறப்படடிருந்த போதிலும் இது வரை புறத்தொதுக்கல் அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை
	(iv). நிதி ஒழுங்கு விதி 756 (6)	கடந்த வருடத்தின் பண்டக் கணக்கெடுப்பு அறிக்கை எதிர்வருகின்ற வருடத்தின் யூன் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் எனினும் ,2022 ஆம் வருடத்தின் மட்டக்களப்பு சிறைச்சாலை மற்றும் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் பண்டக் கணக்கெடுப்பு அறிக்கைசமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை

என்பதோடு, மேலும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அனைத்து நிறுவனங்களதும் பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பில் பொருத்தமானவாறு நடவடிக்கையெடுத்தல் தொடர்பான அறிக்கை இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.4. ஒருநிமித்த இடைக்கால கட்டு நிதி வழங்கல் மற்றும் செலுத்தி தீர்த்தல்.

(அ) நிதி ஒழுங்கு விதி 371 (2) (ஆ) பிரகாரம் பதவிநிலையல்லாத அலுவலர்களுக்கு ஒரு நிமித்த இடைக்காலக் கட்டு நிதி வழங்க முடியாதென்ற போதிலும், ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் 05 பதவிநிலையல்லாத அலுவலர்களுக்கு 38 சந்தர்ப்பங்களின் போது ஒரு நிமித்த இடைக்காலக் கட்டு நிதியாக ரூபா. 699,280 தொகை வழங்கப்படடிருந்தது.

(ஆ) அதே போன்று பெறப்பட்ட முற்பணத் பணி நிறைவடைந்தவுடன் செலுத்தி தீர்ப்பட வேண்டுமெனினும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் பல்வேறு பணிகளுக்காக 70 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா. 1,536,560 முற்பணத் தொகை, நிதி செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய தினம் தொடக்கம் 07 நாட்களுக்கும் 290 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம்மொன்று தாமதாக செலுத்தி முடிக்கப்பட்டிருந்தது.

(இ) மேற் குறிப்பிடப்பட்டவாறு செலுத்தி முடிக்கப்படாமை காரணமாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தின் 46 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 1,202,210 முற்பணத் தொகைக்கு உரியதான ரூபா. 389,773 தொகை 07 நாட்களுக்கும் 169 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம்மொன்று குறித்த நபர் வசம் காணப்பட்டுள்ளது.

2.5. வைப்புக்கள்.

(அ) 6000-0-0-006-0-081 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் 2023 திசெம்பர் 31 திகதியில் ரூபா. 5,413,490 மீதியொன்று காணப்பட்டதோடு இந்த வைப்புக்கள் சிறைக்கைதிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளில் செலவு வைப்பதற்குரிய நிதி என்பதோடு இந்த மீதியில் நூற்றுக்கு 15 அதாவது ரூபா. 805,661 தொகை வைப்புக்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பொது வைப்புக்கள் கணக்கில் காணப்பட்டன.

(ஆ) 6000-0-0-1-16 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் 2023 திசெம்பர் 31 திகதியில் ரூபா. 4,234,468 மீதியொன்று காணப்பட்டதோடு இந்த வைப்புக்கள் பிணைப்பணம் வைர்ச் செய்ய வேண்டிய சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற பிணைப்பணம் அந்த அலுவலர்களின் வங்கிக் கணக்குகள் திறக்கப்படும் வரை பிடித்து வைக்கப்படும் பணம் என்பதோடு நிதி ஒழுங்கு விதி 885 இன் பிரகாரம் முறையான விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதால் இந்த மீதிகளில் நூற்றுக்கு 24 அதாவது ரூபா. 995,603 தொகை வைப்புக்கள் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்றினுள் பொது வைப்புக்கள் கணக்கில் காணப்பட்டன.

3 - செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

3.1.1. திட்டமிடல்

சிறைசாலைகள் திணைக்களத்தினால் அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்கும் போது வருடத்தினுள் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களுக்குரிய உண்மையான செயற்பாடுகளை இனங்கண்டு கொண்டு கிரய மதிப்பீட்டை தயாரித்து அதற்கமைய திட்டம் தயாரிக்கப்படாமல் பெயரளவு (Dummy) செயற்பாடுகளுக்கான ஒதுக்கீட்டை மதிப்பீடு செய்து அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.பின்னர் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கு பொருந்தும் விதத்தில் வருட இறுதியில் அமுலாக்கல் திட்டம் திருத்தம் செய்யப்பட்டிருந்து. அவ்வாறு அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்ட காரணத்தால், உருவகத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து பணிகள் (பண்டங்கள்,சேவைகள் மற்றும் கருத்திட்டம்) மீளளிப்புச் செய்வதற்காக பயன்படுத்தும் ஒரு முகாமைத்துவ கருவியாக அமுலாக்கல் திட்டத்தைபயன்படுத்த முடியாது காணப்பட்டதோடு சிக்கனம்,வினைத்திறன் மற்றும் விளைதிறன் பிரகாரம் காலத்திற்கு ஏற்றவாறு திட்டங்களை வகுக்கின்ற ஏதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கு முடியாமல் போயிருந்தது.

3.1.2 எதிர்பார்க்கப்பட்ட நன்மைகளை அடைந்து கொள்ளமை

நாட்டின் பாடசாலை மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதற்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்கள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்ற சந்தர்ப்பம் ஒன்றின் போது தேசிய பாடசாலை அடிப்படையில் பேணிவரப்படுகின்ற வட்டரெக்க இளம் தவறாளிகள் சீர்திருத்த பயிற்சிப் பாடசாலைக்காக வழங்கப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளங்களுக்கு ஒப்பீட்டளவில் போதியளவு மாணவர் எண்ணிக்கை காணப்படாமை மற்றும் கல்வி கற்கின்ற மாணவர்களுக்காக மிகவும் பொருத்தமான வழிமுறையொன்றை நடைமுறைப்படுத்தாமை காரணமாக இந்தக் கருத்திட்டத்தின் மூலம் சிறந்த பெறுபேறுகளை அடைந்து கொள்ள முடியாமல் போயிருந்தது.

3.1.3 கருத்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

(அ) சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற அதிக இட நெருக்கடிக்கு தீர்வாக நீர்கொழும்பு, பல்லன்சேனை இளம் தவறாளிகள் சீர்திருத்த நிலையத்தின் அவசரத் தேவைகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு 2019 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களம் 135 மில்லியன் கருத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த கருத்திட்டம் 2020 செப்தெம்பர் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 பெப்ருவரி மாதம் 06 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 திசெம்பர் வ 31 ஆம் திகதியாகும் போது இக்கருத்திட்டத்தின் 11 பிரதானமான வேலைப்பகுதிகள் நிறைவு செய்ய வேண்டியிருப்பதோடு, அதில் 07 வேலை விடயங்களுக்கான மதிப்பிடப்பட்ட செலவு ரூபா. 10,478,341 ஆகுமென்பதோடு ஏனைய 04 வேலை விடயங்களுக்குத் தேவையான ஒதுக்கீட்டுத் தொகை தொடர்பான மதிப்பீட்டு இதுவரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 3 ஆம் பந்திக்கமைய அமுலாக்கல் திட்டத்தை தயாரிக்கும் போது இந்த கருத்திட்டங்களுக்குரிய செயற்பாடுகள், அமுலாக்கல் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் 2023 வருட இறுதிவரை இந்தக் கருத்திட்டம் தொடர்பாக கடற்படையினருக்கு ரூபா. 106,604,005 ஒதுக்கீடு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், கடற்படையினால் ரூபா. 60,957,235 வரை செலவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறைப்பயன்பாட்டு ஒதுக்கீட்டுத் தொகை ரூபா. 45,646,770 ஆகக் காணப்பட்டது. நிதி ஒழுங்கு விதி 136(1) பிரகாரம் உரிய சேவையின் உரிய அதிகார தத்துவத்தின் உள்ளடக்கத்தின் போது உள்ள செலவுத் தரநிலையில் அல்லது தத்துவம் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு உள்ளடக்கப்பட்டிக்க வேண்டுமென்பதோடு, அதற்கு இசைவாக செயற்படாமல் திறைசேரி அனுமதியும் இன்றி பல்லன்சேனை இளம் தவறாளிகள் சீர்திருத்த நிலையத்தின் அபிவிருத்தி கருத்திட்டத்தின் பணிகளை ஆற்றிய சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிக்குழுவிற்கு 2021 வருடத்தின் ஆரம்பம் தொடக்கம் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் இணைந்த படியாக ரூபா. 22,293,250 செலுத்தப்பட்டிருந்தது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIV அத்தியாயத்தின் 1.3 ஆம் உறுப்புரைக்கு இணங்காமல் இந்த கருத்திட்டத்தில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிக்குழுவிற்காக 2020 நவம்பர் மாதம் தொடக்கம் 2021 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு இணைந்த படி வழங்கி சிறு நிருவாக பெறுகைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் அவர்கள் பெற்றுக்கொண்ட உணவு, பானங்களுக்காக சிறைச்சாலை உணவகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா. 4,677,625 தொகை இந்தக் கருத்திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2019 ஒக்தோபர் மாதம் 19 ஆம் திகதி கேகாலை சிறைச்சாலை வளாகத்தினுள் இடம்பெற்ற மணசரிவு காரணமாக நிலையற்ற தன்மை நிலையை அடைந்துள்ள நிலத்தை உறுத பெறச் செய்வதற்காக கீழ்ப்பகுதியில் சுவர் ஒன்றை நிருமாணித்தல் மற்றும் மண் சரிவு ஏற்பட்ட இடத்தில் உள்ள மதிற்சுவரைப் பழுதுபார்ப்பதற்காக ரூபா. 20,667,766 செலவு செய்யப்பட்டிருந்தது. குறித்த கருத்திட்டம் உரிய அடிப்படையில் மேற்கொள்ளப்படாமை காரணமாக உடைந்து வீழ்ந்துள்ள மதிற்சுவர் பகுதிகளை மற்றும் எஞ்சியுள்ள கட்டிடம் மண்சரிவுக்கு உட்படக்கூடிய நிலையில் அல்லது உடைந்து விழக்கூடிய ஆபத்தான நிலையில் காணப்படுவதோடு இதற்குள் கைதிகள் மற்றும் அலுவலர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மதிற்சுவர் உடைந்துள்ள பகுதியை மூடுவதற்காக பாதுகாப்பு தகர மறைப்பு செய்யப்பட்டுள்ளதோடு மேலும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாதுகாப்பு கம்பி வேலியும் அமைக்கப்பட்டுள்ள போதிலும் சிறைச்சாலையின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு மதிற்சுவர் நிர்மாணம் கட்டாயமானதென்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

3.2. பெறுகைகள்

(அ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோப்பின் 3.4.1 ஆம் பந்தி மற்றும் பெறுகை கைநூலின் 2.14.1 இல் காட்டப்பட்டுள்ளவாறு பிரதேச பெறுகைக் குழுவினால் பொருட்களைக் கொள்ளவனவு செய்யும் போது சந்தை ஒப்பீட்டு முறையை பின்பற்றி பொறியிடப்பட்ட 5 இற்கு குறையாத விலைமனுக்களைக் கோருதல் வேண்டும். இருப்பினும் அதற்கு இசைவாகச் செய்றபடாமல் களுத்துறை சிறைச்சாலையில் 2023 முதல் 08 மாதங்களினுள் 03 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் வலைமனுக்கோரி 12 சந்தர்ப்பங்களில் ரூபா 1,184,320 கொள்வனவுகளும், நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 முதல் 06 மாதங்களினுள் 03 நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் வலைமனுக்கோரி 03 சந்தர்ப்பங்களில் ரூபா 315,375 கொள்வனவுகளும் செய்யப்பட்டிருந்துது. இந்தக் கொள்வனவிற்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் அல்லது டெலிகொம் ரேன்போ பக்கங்களில் பட்டியல் படுத்தப்பட்டுள்ள வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் குறித்த விலைமனுக் கோரப்படல் வேண்டுமெனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோப்பின் 2.5.1. (அ) ஆம் பந்தியின் பிரகாரம் கருத்தில் கொள்ளப்படுகின்ற பெறுகைச் செயற்பாடுகளுக்காக நிதி கிடைக்கப் பெறுகின்றதென்பதைப் பெறுகைக் குழுவின் உறுப்பினர்கள் கூட்டாகவும் மற்றும் தனித்தனியாகவும் பொறுப்புக் கூறுதல் வேண்டும். இருந்த போதிலும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் ரூபா 856,195 பெறுமதி கொண்ட காவலரண் கூரை பொருத்துவதற்காக பொறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பெறுகை தீர்மானம் 2022 ஒக்தோபர் 24 ஆம் திகதி எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

3.3. சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ). 363.6394 ஏக்கர் காணிகளின் உரித்து சிறைச்சாலைகள் திணைக்களம் வசம் காணப்பட்ட போதிலும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமை காரணமாக கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறைச்சாலைகள், சிறைக் கூடங்கள், திறந்த சிறை முகாம்கள், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் விவசாயப் பண்ணைகள் அடிப்படையில் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்த 390.9771 ஏக்கர் காணியின் உரிமையை மாற்றிக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 64 பாதுகாப்புக் கெமராக்கள், 02 சாக்கடை நீர்க் கழிவகற்றல் குழாய் முறைமை சுத்தமாக்கிகள் , தகவல் முகாமைத்துவ முறைமைக்குரிய தரவுகளை உட்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற கணணியொன்று, கைவிரல் அடையாள இயந்திரங்கள் 02 செயலிழந்து காணப்பட்டன.

(ஈ) மாதிரி அடிப்படையில் செய்யப்பட்ட பௌதீக பரிசீலனையின் போது அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 47 பொதுச் சேவை வீடுகள், வெதுப்பகப் பிரிவின் சொத்துக்கள், தளுபொத்த இளம் தவறாளிகள் மறுசீரமைப்பு நிலையத்தின் புளக் கல் தயாரிப்பு இயந்திரம், தையல் மெசின், ஆடை பின்னல் இயந்திரம் உள்ளிட்ட பல்வேறுபட்ட 49 இயந்திரங்களும், நீர்கொழும்பு சிறைச்சாலையின் நிழற் பிரதி இயந்திரம், தையல் மெசின் உள்ளிட்ட பல்வேறுபட்ட 11 இயந்திரங்களும், வட்டரெக்க சிறைச்சாலையில் புளக் கல் தயாரிப்பு இயந்திரம், 20 இரும்புக் கட்டில்கள் மற்றும் தண்ணீர் பவுசர் என்பன குறைப் பயன்பாட்டு உபகரணங்களாகக் காணப்பட்டன.

(உ) 2013 ஆம் ஆண்டில் புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சினால் முறையான கையளிப்பின்றி தளுபொத்த இளம் தவறாளிகள் மறுசீரமைப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்த கொப் வண்டிக்குரிய எந்தவோர் ஆவணத்தையும் வழங்கமை காரணமாக 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடியுமாகக் காணப்பட்ட பழுதுபார்ப்புக்களை மேற்கொள்ள முடியாது போனமை காரணமாக இந்த கொப் வண்டி 2013 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாது காணப்படுகின்றது.

(ஊ) 2023 செப்தெம்பர் மாதம் 07 ஆம் சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நடாத்தப்பட்ட கணக்காய்வு முகாமைத்துவ குழு கூட்டத்தில் பொறியியல் (இயந்திரப்) பிரிவின் கீழ் முன்னேற்றத்தை அறிக்கையிடுகின்ற போது மஹர பிரதாக ஜெயிலர் உத்தியோகபூர்வ விடுதியில் 2017 ஆம் ஆணடு தொடக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கார் வண்டி 2023 பெப்ருவரி 28 ஆம் திகதியாகும் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக (களப்) பரீசீலனையின் போது இந்த வண்டி அங்கு காணப்படவில்லை என்பதோடு, சிறைச்சாலைகள் தலைமையகத்தின் உத்தரவின் பேரில் ரத்தமலானைப் பிரதேசத்திலுள்ள தொழிநுட்பக் கல்லூரிக்காக எடுத்துச் செல்வதற்காக மஹர சிறைச்சாலைக்கு வருகை தந்த குறித்த தொழிநுட்பக் கல்லூரியின் அலுவலர்கள் வேறு வானம் ஒன்றில் இதனை ஏற்றி எடுத்துச் சென்றதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும் இந்த வாகனத்தை ரத்தமலானைப் பிரதேசத்திலுள்ள தொழிநுட்பக் கல்லூரிக்கு கையளித்தமைக்கான எந்த விதமான சாட்சியங்களும் சிறைச்சாலைகள் திரைணக்களத்திடம் காணப்பவில்லை.

(எ) 2021 மார்ச் மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் வவுனியா சிறைச்சாலை வசமுள்ள வான் வண்டி மற்றும் 2022 மே மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் சிறைச்சாலைகள் தமைமையகத்தின் கெப் வண்டி என்பன பாழுதுபார்புச் செய்வதற்காக வெளித்தரப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்த நிறுவனங்களில் அந்த வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(ஏ) மாதிரி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசீலனையின் போது கொழும்பு மறியல் சிறைச்சாலை, அங்குணகொலபெலஸ்ஸ, நீர்கொழும்பு சிறைச்சாலைகள் மற்றும் தளுபொத்த இளம் தவறாளிகள் மறுசீரமைப்பு நிலையம் ஆகியவற்றின் 13 பஸ் வண்டிகள் மற்றும் ஒரு நோயாளர் காவு வண்டி ஆகியவற்றின் மைலே மீற்றர் 03 மாதங்களுக்கும் மற்றம் 04 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாக செயலிழந்து போயுள்ள நிலையில் காணப்பட்டன. செயலிழந்து போயுள்ள காலப்பகுதியினுள் 395,688 கிலோ மீற்றர் ஓட்டத்திற்காக 95,392 லீற்றர் எரிபொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

3.4. நட்டம் மற்றும் சேதங்கள்

(அ) மீளாய்வு வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (01) கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தொடர்ந்தும் அறவிட வேண்டியுள்ள அல்லது பதிவழித்தல் அல்லது விட்டுவிடுவதற்குள்ள நட்டம் மற்றம் சேதங்கள் பற்றிய விடயங்களில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருகின்ற 28 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 33 சம்பவங்களுக்குரிய நட்டம் 36,220,218 ரூபாவும், 05 தொடக்கம் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் தொடக்கம் இருந்து வருகின்ற 79 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 80 சம்பவங்களுக்குரிய நட்டம் 15,631,990 ரூபாவும், 2023 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 30 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 05 வருடங்களை விட குறைந்த காலமாக இருந்து வருகின்ற 77 வாகன விபத்துக்கள் உள்ளிட்ட 78 சம்பவங்களுக்குரிய நட்டம் 49,955,804 ரூபாக்கள் என அவாதானிக்கப்பட்டது. இந்த நட்டச் சேதங்களில் 06 வாகனங்களுக்குரிய விபத்து தொடர்பில 2,937,032 ரூபா நட்டத்தை ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டள்ள போதிலும் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் அவர்களின் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. நிதி ஒழுங்கு விதி 103 (1) பிரகாரம் அலுவல்களை மேற்கொள்ளாமல் தொடர்ச்சியாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2023 வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் இணைப்பு (I) இன் கீழ் அறவிட்டுக் கொள்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது விட்டுவிடுவதற்காக உள்ள நட்டம் அல்லது சம்பவங்களில் 2017 தொடக்கம் 2021 ஆண்டு இறுதி வரை ஏற்பட்ட 05 நட்டங்களுக்கான நட்டங்கள் கணக்காய்வு தினம் அதாவது 2024 பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ). நிதி ஒழுங்கு விதி 104 (3) இன் பிரகாரம் முழு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு 07 நாட்களை விடத் தாமதமொன்று ஏற்படுமென எதிர்பார்க்கப்படுமாயின் நட்டம் அல்லது சேதங்கள் தொடர்பாக தொடக்க அறிக்கையொன்றை உடனடியாக அனுப்பி வைத்தல் வேண்டும். இருப்பினும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு உரியதாக 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஏற்பட்டுள்ள நட்டம், சேதங்கள் 122 தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 104 (3) இன் பிரகாரம் தொடக்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதி ஒழுங்கு விதி 104 (4) இன் பிரகாரம் நட்ட சேதம் இடம்பெற்ற தினத்திலிருந்து 03 மாதங்களினுள் முழு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க

வேண்டுமெனினும் மேற்படி அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள தொடக்க அறிக்கை சமர்ப்பிக்கப்படாத 122 நட்ட சேதங்களுக்கு மேலதிகமாக சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு உரியதாக 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஏற்பட்டுள்ள நட்டம், சேதங்கள் 34 தொடர்பாக நிதி ஒழுங்கு விதி 104(4) இன் பிரகாரம் முழு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2021 நவம்பர் மாதம் 22 வானமொன்று விபத்துக்குள்ளாகி காணப்பட்டதோடு, 2022 சனவரி மாதம் 05 ஆம் திகதி டொயோட்டா லங்கா தனியார் கம்பனியினால் இந்த பழுதுபார்ப்புக்காக ரூபா. 4,974,724 மதிப்பீடொன்றும் மற்றும் அதன் பின்னர் 2022 ஒக்தோபர் 19 ஆம் திகதி ரூபா 8,656,243 புதிய மதிப்பீடொன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை காப்புறுதி கம்பனியினால் 2022 மார்ச் மாதம் 18 ஆம் திகதி செய்யப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய 2022 யூன் மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் பழுதுபார்புச் செய்து வாகனத்தை பரிசோதனைக்கு சமர்ப்பித்தல் அல்லது அவ்வாறு செய்ய முடியாதெனில் அதற்கான காரணங்களை அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு சிறைச்சாலை தவறிய காரணத்தால் இந்த உரித்து தொடர்பில் எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ள முடியாதென 2022 நவம்பர் 03 ஆம் திகதி இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. நிதி ஒழுங்கு விதி 156 (1) இன் பிரகாரம் ஓர் உத்தியோகத்தரின் தாமதத்தினால், கவனமின்மையினால் , தவறொன்றினால் அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற ஏதேனும் நட்டமொன்று தொடர்பில் அந்த அலுவலர் நேரடியாகப் பொறுப்புக் கூற வேண்டுமென்பதோடு, நிதி ஒழுங்கு விதி 104 (4) இன் பிரகாரம் விபத்து இடம்பெற்ற தினத்திலிருந்து மூன்று மாதங்களினுள் முழு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டுமெனினும், கணக்காய்வு சந்தர்ப்பம் வரையிலும் அந்த அறிக்கையும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அங்குணகொலபெலஸ்ஸ, நீர்கொழும்பு, களுத்துறை சிறைச்சாலை நிறுவனங்கள் மற்றும் தளுபொத்த இளம் தவறாளிகள் மறுசீரமைப்பு நிலையம் ஆகியவற்றின் 2023 ஆம் ஆண்டினுள் மின்சாரப் பட்டியலுக்காக கொடுப்பனவு செய்யும் போது உரிய காலப்பகுதியினுள் செலுத்தாமை காரணமாக தண்டப் பணமாக (மிகை விதிப்பு) ரூபா.1,392,311 மற்றும் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் 2023 ஆம் ஆண்டினுள் தண்ணீர் பட்டியலுக்காக கொடுப்பனவு செய்யும் போது உரிய காலப்பகுதியினுள் செலுத்தாமை காரணமாக தண்டப் பணமாக (மிகை விதிப்பு) ரூபா 188,306 செலுத்தப்பட்டிருந்து.

3.5. பொருளாதாரம் சாராத கொடுக்கல் வாங்கல்கள்.

(அ. மாதிரி அடிப்படையில் செய்யப்பட்ட பரிசீலனையின் போது 2023ஆண்டு திசெம்பர் மாதத்தில் 31 நாட்களினுள் வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகள் 233 சந்தர்ப்பங்களில் அலுவலர்களின் வீட்டு வளாகத்தினுள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததோடு, சிறைக் காவலர் அலுவலர்களின் 234 மனித நாட்கள் காலப்பகுதியும் அதற்காகச் செலவிடப்பட்டிருந்தது. இந்தக் காலப்பகுதியினுள் சிறைச்சாலை வளாகத்திற்கு வெளியில் அமையப்பெற்றுள்ள அலுவலர்களின் வீடுகள் சார்ந்த வளாகங்களினுள் பணியில் ஈடுபடுத்தப்பட்ட கைதிகளை அந்த இடங்களுக்கு கொண்டு செல்வதற்காக 62 சந்தர்ப்பங்களின் போது தலைமையகத்தின் 09 ஒதுக்கு வாகனங்கள் 372 கிலோ மீற்றர் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2023 சனவரி 27 ஆம் திகதிய 01/2003 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றிக்கை மூலம் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவும் மிகவும் கடுமையாக கட்டுப்படுத்தப்படல் வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் சிறைச்சாலைகள் திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு மற்றம் விடுமுறை தினக் கொடுப்பவாக 982 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்ததோடு அது 2022 ஆண்டுடன் ஒப்பீட்டளவில் 106 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

(ஆ) 2023 சனவரி 27 ஆம் திகதி வெளியிடப்பட்ட 01/2003 ஆம் இலக்க வரவு செலவுத் திட்ட சுற்றிக்கையின் 2 (இ) (III) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1003 செலவு விடய குறியீட்டின் கீழ் கொடுப்பனவு செய்யும் போது உண்மையாக சேவைத் தேவைப்பாடு உள்ள செலவுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்தல் வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதற்கு இசைவாகச் செயற்படாமல் ஜெயிலர்களின் இரவுப் பாதுகாப்பு ரோந்து சேவைக்காக கொடுப்பனவு செய்யப்படடிருந்து. கைதிகள் உள்ள இடங்களான சிறைச்சாலைகள், சிறைச்சாலை வைத்தியசாலைகள் அல்லது வேறு இடங்களைச் சோதனை செய்வதற்கான ஜெயிலர்களின் இரவு ரோந்துப் பணிகளுக்குக் கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இருப்பினும் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்தப் பயிற்சி நிலையத்தில் கைதிகள் இரவு நேரத்தில் தடுத்து வைப்பதில்லை என்பதால் அந்த வளாகத்தினுள் ஜெயிலர்கள் இரவு நேரத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட வேண்டிய தேவைப்பாடு இல்லை எனினும் 2023 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் சீர்திருத்த பயிற்சி நிலையத்தில் ஜெயிலர்கள் இரவு பாதுகாப்பு ரோந்துப் பணியில் ஈடுபட்டமைக்காக 12 சந்தர்ப்பங்களின் போது ரூபா 125,200 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

3.6. கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளிக்காமை.

தினைக்களத்திற்கு விநியோகிக்கப்பட்ட 11 கணக்காய்வு விசாரணைகளுக்கு 2024 மே 21 ஆம் திகதி வரையிலும் பதில்கள் அனுப்பி வைக்கப்படடிருக்கவில்லை.

3.7. முகாமைத்துவப் பலவீனங்கள்

(அ). பிணைப் பணம் செலுத்த முடியாத குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுவதோடு, அந்த சிறைக் கைதிகளின் பிணைப் பணம் செலுத்தப்பட்டு விடுதலை செய்வதற்கான கட்டளை கிடைத்தவுடன் அவர்கள் சிறைத்தண்டனையில் இருந்து விடுதலை செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 சனவரி மாதத்தினுள் பிணைப் பணம் செலுத்தப்பட்டு விடுதலை செய்வதற்கான கட்டளை கிடைத்த தினத்திலேயே சிறைத்தண்டனையில் இருந்து விடுதலை செய்யப்படாத 121 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) தண்டப்பணம் செலுத்த முடியாத குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுவதோடு, அந்த சிறைக்கைதிகளின் தண்டப்பணம் செலுத்தப்பட்டு விடுதலை செய்வதற்கான கட்டளை கிடைத்தவுடன் அவர்கள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்படுதல் வேண்டும். இருப்பினும் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 சனவரி 01 தொடக்கம் 2023 யூன் 30 வரையான காலப்பகுதியினுள் விடுதலை செய்வதற்கான கட்டளை கிடைத்த தினத்தினுள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்படாத 292 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) சட்ட விரோதமானான அடிப்படையில் கையடக்கத் தொலைபேசிகளை மறைத்து வைத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வெளியில் வெளித் தரப்பினருக்கு மேற்கொள்கின்ற அழைப்புக்களை தடுப்பதற்காக சிறைச்சாலையினுள் அமைக்கப்பட்டுள்ள தொலைபேசி சமிக்ஞை தடைசெய்தல் முறைமை முறையாக செயற்படுவதில்லை என்பது நீர்கொழும்பு மற்றும் அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசீலனையின் போது தெரியவந்தது.

(ஈ) தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 பிரிவின் பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்ட வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துக்கொண்டுள்ள (பொதுச் சேவை வீடுகள் பெற்றுக் கொண்ட) திருமணமான அலுவலர்களின் சம்பளத்தில் 12 ½ வீட்டுக் கூலியாக அறவிடல் வேண்டுமெனினும் அதற்கு இசைவாகச் செயற்படாமல் 2023 ஆம் ஆண்டில் 05 சிறைச்சாலைகள் நிறுவனங்களில் அட்டவணைப்படுத்தப்பட்ட வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரித்தற்ற திருமணமான 76 அலுவலர்களிடமிருந்து ரூபா. 2,334,509 வீட்டு வாடகையாக அறவிட வேண்டியுள்ள போதிலும் வீட்டு வாடகையாக சம்பளத்திலிருந்து நூற்றுக்கு 10 வீதம் மாத்திரம் அதாவது ரூபா.

1,864,952 அறவிடப்பட்டிருந்தது. இதற்கமைய ரூபா. 469,557 குறைவாக அறவிடப்பட்டிருந்துது.

(உ) நிதி ஒழுங்கு விதி 210 இன் பிரகாரம் கழிவு பெறக்கூடிய எல்லா சந்தர்ப்பங்களிலும் அந்த கழிவை பெறக்கூடியதாக முன்கூட்டியே கொடுப்பனவு செய்யப்படல் வேண்டுமெனினும்,அங்குணகொலபெலஸ்ஸ, களுத்துறை,நீர்கொழும்பு, வட்டரக்க மற்றும் தளுபொத்த இளம் தவறாளிகள் சீர்திருத்த நிலையம் ஆகியனவற்றின் 15 கணக்குகளுக்கு உரியதாக 2023 ஆம் ஆண்டின் தண்ணீர் பட்டியல் செலுத்தும் போது கழிவைப் பெறுவதற்காக உரிய காலப்பகுதியினுள் கொடுப்பனவு செய்யாமை காரணமாக ரூபா. 488,461 தொகை கழிவைப் பெற்றுக் கொள்வதறகு முடியாது போயுள்ளது.

(ஊ) சிறைச்சாலையினால் அரச பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா. 148,826,252 மீதியில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா. 2,377,921 உம் மற்றும் 5-20 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா. 23,643,153 உம் கொண்ட கிடைக்க வேண்டிய மீதிகள் மற்றும் மற்றும் சிறைச்சாலையினால் தனியார் பிரிவுகளுக்குச் செய்யப்பட்ட விற்பனைகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா. 35,618 மீதியில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா.19,034 உம் மற்றும் 10 - 20 வருடங்களுக்கு இடைப்பட்ட ரூபா.16,584 கிடைக்க வேண்டிய மீதிகள் நீண்டகாலம் தொடக்கம் இருந்து வருகின்ற கடன் மீதிகள் ஆகுமொன்பதோடு, இவற்றை நிதி ஒழுங்கு விதி 520 (ஆ) பிரகாரம் தாமதமின்றி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ). ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்கள் மற்றும் சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இசைவாக மற்றும் உள்ளக சுற்றறிக்கைகளுக்க அமைவாக சிறைக்கைதிகளின் உளவியல் மற்றும் உடலியல் தகைமைகளுக்கு பொருந்தக் கூடியவாறு போதுமானளவு இடவசதிகள் காணப்பட வேண்டுமெனினும் 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசீலனையின் போது 05 சிறைச்சாலைகள் நிறுவனங்களில் 62 சிறை வாட்டுகளில் தடுத்துவைக்க கூடிய கைதிகள் எண்ணிக்கையை விட அதிகமான கைதிகள் 2,601 பேர் தடுத்து வைக்கப்படடிருந்ததோடு அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 12 வாட்டுகளில் தடுத்துவைக்க கூடிய கைதிகள் எண்ணிக்கையை விட 127 கைதிகள் குறைவாக தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) நீதிமன்றத்தினால் சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு உரியதாக பொலிசாரினால் இரசாயனப் பகுப்பாய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதைப் பொருட்கள் மாதிரிகளுக்குரிய இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை

இதுவரை சமர்ப்பிக்கப்படாமை காரணமாக 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வினால் மாதிரி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசீலனைக்கமைய அங்குணகொலபெலஸ்ஸ, களுத்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய சிறைச்சாலைகளில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக கைதிகள் எண்ணிக்கை 1,421 ஆகும்.

(ஐ) மாதிரி அடிப்படையில் செய்யப்பட்ட கணக்காய்வு பரிசீனையின் போது 2023 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி ஆகும்போது நீதிமன்றத்தினால் புனர்வாழ்வளிப்பதற்காக கட்டளையிடப்பட்டு புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் எதிர்பார்ப்பில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமொன்று அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை 45 ஆகும்.

(ஒ) மாதிரி அடிப்படையில் செய்யப்பட்ட கணக்காய்வு பரிசீனையின் போது அங்குணகொலபெலஸ்ஸ, வட்டரெக்க, நீர்கொழும்பு, வெலிகடை, மஹர மற்றம் போகம்பர ஆகிய சிறைச்சாலை நிறுவனங்களில் 2023 சனவரி மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் இறுதி வரையான காலப்பகுதியினுள் மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகள் 2,316 ஆகும். மேலும் சிறைச்சாலைகளில் மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படுகின்ற நபர்களை இனங்காண்பதற்காக முறையான வழிமுறையொன்று கூட சிறைச்சாலைகளினுள் இல்லையென்பதோடு, தற்போது சிறைச்சாலைகளில் மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படுகின்ற சிறைக்கைதிகள் அந்த சிறைக்கைதிகள் வாய்மொழிமூலம் வழங்குகின்ற தகவல்களின் அடிப்படையிலேயே இனங்காணப்படுவதாக கணக்காய்வின் போது தெரியவந்தது.

(ஓ) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 54 பந்திக்கு உரியதாக 1956 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட திருத்தத்தின் 223 அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு சிறைக்கைதிக்காகவும் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அளவிற்கேற்ப அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள சிறை ஆடையை அணிவதும் மற்றும் பயன்படுத்துவதும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 2023 நவம்பர் 13 ஆம் திகதியாகும் போது 500 பேருக்கு மேற்பட்ட சிறைக்கைதிகள் இருக்கின்ற போதிலும் அவர்களில் 75 பேர் வரையான சிறைக்கைதிகளுக்கு சிறை ஆடை இல்லாத காரணத்தால் அவர்கள் தாமகவே பெற்றுக்கொண்ட ஆடைகளையே பயன்படுத்துகின்றனர். ஏனைய சிறைக்கைதிகளுக்கு வழங்கப்பட்டள்ள சிறை ஆடைகளும் நல்ல நிலையில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(ஒள) சிறைச்சாலைகளில் நிலவுகின்ற இந்த அசாதாரணமான இடநெருக்கடிக்கு போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்கள் காரணமாக சிறையில் அடைக்கப்படுதல் பிரதான காரணமாகும். போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்கள் சம்பந்தமாக சிறையில் அடைக்கப்படுகின்ற கைதிகளில் பெரும்பாலானவர்கள் போதைப் பொருட்கள் பாவணைக்கு அடிமைப்பட்டவர்கள் என்ற காரணத்தால் ஏதேனும் ஒரு விதத்தில் அல்லது தேவையான போதைப் பொருட்கள் அளவினை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்வதோடு, அவ்வாறான நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக சிறைச்சாலை அலுவலர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியேற்றப்பட்டது. இது சிறைச்சாலையின் பிரதான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு போன்றே சிறைச்சாலையின் உள்ளகப் பாதுகாப்பு மற்றும் செயற்பாடுகளுக்கு தடையாகவுள்ளது. இது தொடர்பில் நீர்கொழும்பு மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளினுள் நடாத்தப்பட்ட பௌதீக பரிசீலனையின் போது நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 ஆகஸ்ட் 27 ஆம் திகதியில்மொத்தக் கைதிகளின் எண்ணிக்கை 2,225 ஆகுமொன்பதோடு, அதில் நூற்றக்கு 65 இற்கு மேற்பட்டவர்கள் அதாவது 1,442 பேர் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட கைதிகளாகும். களுத்துறை சிறைச்சாலையில் 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மொத்த சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 1,275 ஆகுமென்பதோடு அதில் நூற்றுக்கு 69 இற்கு மேற்பட்ட தொகையினர் அதாவது 855 பேர் போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட கைதிகளாகும்

(க) அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 2023 ஆம் ஆண்டு செப்தெம்பர் 30 ஆம் திகதியாகும் போது சிறைக்கைதிகளால் சமர்ப்பிக்கப்பட்டு தீர்க்கப்படாத 03 மாதங்களுக்கு மேற்பட்ட 145 மேன்முறையீடுகள் காணப்பட்டதோடு, அவற்றில் 106 மேன்முறையீடுகள் 02 வருடங்களுக்கு மேற்பட்டவைகளாகக் காணப்பட்டன.

(ங) கௌரவ நீதிமன்றத்தினால் சிறையில் அடைக்கப்படுகின்ற கைதிகளுக்காகப் பிணை விதிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த கைதிகள் பிணை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் நீர்கொழும்பு சிறைச்சாலையில் 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதியாகும் போது 229 கைதிகள் சிறைப்படுத்தப்பட்டு இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.

(ச) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்கிற்குரிய இணக்கக் கூற்றின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டிய தனியாள் மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா. 209,493,057 ஆகும். இதில் திணைக்களத்தில் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகள் தவிர மீளாய்வு வருடத்தின் இறுதியில்

அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா. 11,256,020 ஆக காணப்பட்டதோடு இந்த மிதியில் உள்ளடக்கப்பட்ட ஒரு வருடத்தை விடவும் மேற்பட்டகாலம் நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா. 7,166,507 ஆகக் காணப்பட்டது.

(ஞ) சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அரச அலுவலர்களின் முற்பண "பி" கணக்கிற்குரிய இணக்கக் கூற்றுடன் சமர்ப்பிக்கப்படுகின்ற இணைப்பின் 3.8.1 இன் கீழ் சமர்ப்பிக்கப்படுகின்ற ஏனைய நிலுவையாகக் காணப்பட்ட கடன்மீதிகளில் 03 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இருந்து வருகின்ற ரூபா. 401,153 கடன் மீதியொன்று காணப்பட்டதோடு இந்தக் கடன் மீதிகள் எந்தெந்த அலுவலர்களிடமிருந்து அறவிடப்படல் வேண்டுமென்பதைக் குறிப்பாக இனங்காண்பதற்கு முடியாது காணப்பட்டது.

4. **மனித வளங்கள் முகாமைத்துவம்.**

(அ) திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 திகதிக்கு அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 7,872 ஆகுமென்பதோடு, அன்றைய தினத்தில் உண்மையான பணியாட் குழுவினர் எண்ணிக்கை 6,173 ஆக இருந்தமையால் 02 பதவிகளுக்குரிய 18 மிகையான அலுவலர்கள் மற்றும் 79 பதவிகளுக்குரிய வெற்றிடமாகவுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை 1,707 ஆகக் காணப்பட்டது.

